# Anaesthetists make job easy for surgeons

**NT Bureau**

Chennai, Sept 4:

The presence of an anaesthetist makes the job of surgeons easier, says Commandant of Military Hospital (Chennai) Brigadier Dr A P Kamath.

He was speaking at the inaugural session of OFISACON, a two- day conference on ophthalmic anesthesia, at V D Swami Auditorium on Sankara Nethralaya premises in Chennai yesterday.

An anaesthetist allows doctors concentrate on the nuances of surgery, he said. He said that when it came to ophthalmology, anaesthesia has a major role to play, it is most felt while treating paediatric patients. However, there was a need to tailor anaesthesia to suit the requirements of a patient, he added.

The two- day conference includes lectures and workshops and would provide an insight into the principles and practice of ophthalmic anaesthesia including controversial issues and latest research on the subject.




*Commandant of Military Hospital (Chennai) Brigadier Dr A P Kamath lighting the traditional lamp to mark the inaugural session of OFISACON, a two- day conference on ophthalmic anesthesia, at V D Swami Auditorium on Sankara Nethralaya premises in Chennai yesterday.*

Anaesthesiologists from the US, the UK, New Zealand, Egypt, Indonesia, Singapore, Turkey and other neighbouring countries are expected to attend the meet.

# Ophthalmic anaesthesia conference under way

CHENNAI: A two-day conference on ophthalmic anaesthesia got under way on Saturday at Sankara Nethralaya in the city. Ophthalmologists and anaesthesiologists are participating in the meet, as part of which lectures and a workshop are to be organised. About 12 specialists from several parts of the country and abroad will address the delegates, said S. Bhaskaran, chairman, Sankara Nethralaya.

Brigadier A.P. Kamath, Commandant, Military Hospital, Chennai, who inaugurated the conference of the Ophthalmic Forum of Indian Society of Anaesthesiologists (OFISA), organised by the Medical Research Foundation and the Vision Research Foundation, a unit of Sankara Nethralaya, said "I am comfortable when there is an anaesthetist in the operating theatre as it gives confidence and can do the surgery without worrying about the vitals of the patient."




சென்னை சங்கர நேத்ராலயாவில் இந்திய மயக்க மருந்தியல் கூட்டமைப்பின் கண் மருத்துவ குழுவின் மாநாடு நடந்தது. இந்த நிகழ்ச்சியில் சங்கர நேத்ராலயா தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத், டாக்டர் லிங்கம் கோபால், டாக்டர்கள் ஏ.பி.காமத், தீபக் மாளவியா, சுஜாதா விட்டல், வி.வி.ஜெயச்சந்திரன், ஷோபா, ரவிசங்கர், ஆர்.சுஜாதா உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மயக்க மருந்தியல் நிபுணர்கள் மாநாடு

சென்னை, செப். 5-

இந்திய மயக்க மருந்தியல் நிபுணர்கள் கூட்டமைப்பின் சார்பாக, கண் மருத்துவக் குழுவின் சர்வதேச முதல் மாநாடு சென்னையில் நடந்தது.

நுங்கம்பாக்கம் சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் நடந்த மாநாட்டில், சங்கர நேத்ராலயாவின் தலைவர் பாஸ்கரன் வரவேற்றார். பின்னர், மாநாட்டு மலரை ராணுவ மருத்துவமனை கமாண்டென்ட் காமத் வெளியிட, பாஸ்கரன் பெற்றுக் கொண்டார்.

விழாவில், கிரிஸ் டாட்ஸ் (இங்கிலாந்து), சந்திரா குமார் (சிங்கப்பூர்), எஸ் ஸாட் அஜீஸ் (எகிப்து), ஓயா யாலின் (இங்கிலாந்து), பிலிப் கைஸ் (நியூசிலாந்து), ஷாவிவ் ஓக்ரா (இங்கிலாந்து), இந்து மோகினி சென், சர்மா, (இந்தியா) ஆகிய மருத்துவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். மயக்க மருந்தியல் தொடர்பாக, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு நடந்த வினாடி- வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசு வழங்கப்பட்டது.



மாநாட்டில் டாக்டர் தீபக்மால்வியா குத்து விளக்கேற்றிய போது எடுத்த படம். அருகில் சங்கர நேத்ராலயா சேர்மன் பாஸ்கரன், மயக்க மருந்தியல் துறை டாக்டர் ஜெயச்சந்திரன், ஏ.பி.காமத் உள்ளனர்.

கண் மருத்துவ துறையின்

# மயக்க மருந்தியல் நிபுணர்கள் மாநாடு

சென்னை, செப். 4–

இந்திய மயக்க மருந்தியல் நிபுணர்கள் கூட்டமைப்பின் கண் மருத்துவ குழுவின் முதல் மாநாடு சென்னை சங்கரா நேத்ராலயா கண் ஆஸ்பத்திரியில் நடந்தது.

2 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு வந்த டாக்டர்களை சங்கரா நேத்ராலயா சேர்மன் டாக் டர் எஸ்.பாஸ்கரன் வரவேற்றார்.

கண் மருத்துவ மயக்க மருந்தியலின் நோக்கம், செயல்பாடுகளில் நிலவி வரும்புதிய அணுகுமுறைகள், பிரச்சினைகள், ஆராய்ச்சிகள் குறித்து இந்த மாநாட்டில் டாக்டர்கள் விவாதித்தனர். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, எகிப்து, இந்தோனேசியா, சிங்கப்பூர், துருக்கி உள்பட பல நாடுகளில் இருந்து கண் மருத்துவ நிபுணர்கள், மயக்க மருந்தியல் நிபுணர்கள் பலர் பங்கேற்றனர்.

முதல் நாள் மாநாட்டில் சென்னை ராணுவ ஆஸ்பத்திரி கமாண்டன்ட் ஏ.பி.காமத், சங்கரா நேத்ராலயா நிறுவன தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.பத்ரிநாத், டாக்டர்கள் தீபக் மால்வியா, லிங்கம் கோபால், சுஜாதா விட்டல், மயக்க மருந்தியல் துறை தலைவர் டாக்டர் வி.வி.ஜெயச்சந்திரன், டாக்டர் ஜெகதீஷ், டாக்டர் ஷோபா ரவிசங்கர், டாக்டர் தீபக்மால்வியா, உள்பட பலர் கண் மருத்துவ முன்னேற்றம் குறித்து விரிவாக பேசினார்கள்.

முடிவில் டாக்டர் சுஜாதா நன்றி கூறினார். மாநாடு இன்றும் (ஞாயிறு) நடக்கிறது.